**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.</u>**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 16 ஆம் நாள்)

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.291/2022</u>**

**<u>CNR.No.TNTI17-001833-2022</u>**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், உடுமலை காவல் நிலையக் குற்ற எண். 559/2022 |
| //எதிர்// | | |
| எதிரி | – | கண்ணன் (31/2022),<br>த/பெ. முருகேசன்,<br>S.S. காலணி,<br>உடுமலைப்பேட்டை. |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இ.த.ச – வின் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இ.த.ச – வின் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களான இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவுகள் 294(b), 323, 506(ii)-ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973, பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| புகார் நாள் | – | 11.10.2022 |
| கைது செய்யப்பட்ட நாள் | – | 11.10.2022 |
| பிணையில் சென்ற நாள் | – | 18.10.2022 |
| கோப்பு நாள் | – | 19.12.2022 |
| விசாரணை தொடங்கப்பட்ட | – | 13.08.2024 |

| | | |
|---|---|---|
| நாள் | | |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 12.03.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 30.03.2026 |

இவ்வழக்கானது 19.12.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.M.சிக்கந்தர் பாஷா, BBM., LLB., அவர்கள் முன்னிலையாகியும், இருந்திட்ட இவ்வழக்கில் அனைத்து ஆவணங்களையும், சாட்சியங்களையும், பரிசீலனை செய்த பின்னரும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

எதிரி மீது உடுமலை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண்.559/2022 ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு

1) வாதி கலைச்செல்வன் கடந்த 10.10.2022 ஆம் தேதியன்று வாராந்திர ஓய்வில் வீட்டில் இருந்தவர் உடுமலை – தளி ரோட்டில் உள்ள ராசி கல்யாண மண்டபத்தில் நடைபெறும் பொருட்காட்சிக்கு சென்றுள்ள தனது மனைவியையும் தனது குழந்தைகளை அழைத்து வர வேண்டி வீட்டிலிருந்து TN 20 L 0824 என்ற பதிவு எண் கொண்ட SPLENDER இரு சக்கர வாகனத்தை வடக்கிலிருந்து தெற்கு நோக்கு ஓட்டிக் கொண்டு இரவு சுமார் 09.15 மணிக்கு உடுமலை – தளி ரோட்டில் ஸ்டார் பேக்கரி அருகே வந்தபோது அதே ரோட்டில் எதிர் திசையில் எதிரி கண்ணன் TN 78 S 7101 என்ற பதிவு எண் கொண்ட HERO PLEASURE இருசக்கர வாகனத்தை ரோட்டில் தாருமாறாக ஓட்டி வந்து வாதிக்கு

முன்னால் சென்ற கனரக வாகனத்தின் மீது மோதுவதுபோல் வந்து பின் வாதி மீது மோதுவது போல் வருவதைப் பார்த்த வாதி எதிரி கண்ணனைப் பார்த்து "பார்த்து போகமாட்டியா " என்று கேட்டு பதற்றத்தில் அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்தியதாகவும், அப்போது சிறிது தூரம் சென்ற எதிரி இருசக்கர வாகனத்தை திருப்பி ஓட்டி வந்து வாதியைப் பார்த்து நீ யாருடா கொம்மா புண்டை பாத்து போனு சொல்றதுக்கு கோத்தா என்று கெட்ட வார்த்தையால் திட்டிய குற்றத்திற்காகவும், எதிரி வாதியின் இடது கன்னத்திலும் தோள்பட்டையில் மாறி மாறி அடித்த குற்றத்திற்காகவும், எதிரி வாதியை பார்த்து என் கிட்டே இனிமேல் வச்சிக்கிட்டா உன்னை பைக்கை ஏற்றி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் வாதிக்கு மரணபயத்தையும் உயிர் பயத்தையும் ஏற்படுத்திய குற்றத்திற்காகவும், எதிரி மீது உடுமலை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் இந்திய தண்டனை சட்டம் 1860 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(ii) – ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973 பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரி மீது 294(b), 323, 506(ii) இந்திய தண்டனை சட்டம் 1860 கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973 பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். மேலும் தன் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார். எனவே

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 09 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு 07 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>:

4) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 கலைச்செல்வன் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 10.10.2022 ம் தேதி ஓய்வில் இருந்ததால் அ.சா.1 ன் மனைவியும், குழந்தையும் ராசி கல்யாண மண்டபத்திற்கு பொருள்கள் வாங்க சென்றுள்ளார்கள். அவர்களை அழைப்பதற்காக வண்டி splender ல் 09.10 மணிக்கு சென்ற போது கேரளா பதிவு எண்ணை கொண்ட கனரக வாகனம் மேம் பாலத்தில் இருந்து கீழே வந்து கொண்டிருந்துள்ளது. அந்த வண்டிக்கு பின்னால் ஆஜர் எதிரியும் மற்றொரு நபரும் ஸ்கூட்டியில் வந்து கொண்டிருந்தனர். வந்தவர்கள் அ.சா.1 ன் வண்டியை மோதுவது போல் வந்ததால் அ.சா.1 ஆனவர் பார்த்து போக வேண்டியது தானே என்று கூறியுள்ளார். அவர்கள் 50 மீ தாண்டி பேக்கரியில் வண்டியை நிறுத்தவிட்டு வந்து "நீ யாருடா கொம்மா புண்டை என்னை பார்த்து போனு சொல்லுவது கோத்தா" என்ற தகாத வார்த்தையால் திட்டியுள்ளார். பின்னர் கன்னத்தில் ஆஜர் எதிரி அடித்து விட்டார். அவருடன் வந்தவர் எதுவும் செய்யவில்லை. பைக்கிலிருந்து கீழே தள்ளி விட்டார். பேக்கரியில் இருந்த பெரியவர் வந்து கேட்டதற்கு அவரை தகாத வார்த்தையால் திட்டியுள்ளார். பின்பு எதார்த்தமாக அந்த வழியாக காவல் உதவி ஆய்வாளர் வந்து பார்த்ததகாவும், சிவிலில் இருந்ததை தெரிந்து கொண்டு, காவல் நிலையம் சென்று புகார்

கொடுத்துள்ளார். புகாரிலுள்ள விவரம் தெரியும். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) அ.சா.2 ரஞ்சித் என்பவர் Zomato–ல் பணிபுரிந்து வந்தபோது, கடந்த 10.10.2021 ம் தேதி இரவு 9.15 மணிக்கு டெலிவரி எடுப்பதற்காக Star bakkery க்கு வந்தபோது கண்ணனின் வாகனம் வேகமாக சென்று வந்துள்ளது. கலைச்செல்வன் தெற்கு பார்த்து இரு சக்கர வாகனத்தில் வந்துள்ளார். சம்பவத்தை அ.சா.2 முழுமையாக பார்க்கவில்லை. 2 பேரும் மாறி மாறி அடித்து கொண்டனர் என்றும், கலைச்செல்வன் கீழே விழுந்து விட்டார் என்றும், டெலிவரி டைம் ஆகிவிட்டதால் வந்து விட்டேன் என்றும், போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தனர் என்றும், 2 தரப்பிலும் கெட்ட வார்த்தையால் பேசினார் என்றும் சொல்லியுள்ளார்.

6) அ.சா.3 முருகேசன் என்பவர் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு அ.சா.3 ம், விக்கி என்பவரும் ஸ்டார் பேக்கரியில் டீ சாட்பபிட்டு கொண்டிருந்தபோது தெரிந்து உதவி ஆய்வளார் அங்கு வந்துள்ளார். அவரை டீ சாப்பிடுமாறு கேட்டு கொண்டார். அவர் அடிதடி வழக்கு சம்பந்தமாக வந்திருந்தார் என்று கூறி வரைபடம் வரைந்ததற்கு, சாட்சி கையொப்பம் கேட்டதற்கு, அ.சா.3 ம் விக்கியும் விவரம் தெரிந்து கையொப்பம் செய்துள்ளார்கள். பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.3 உடையதுதான். அந்த பார்வை மகசர் அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) அ.சா.4 கிஷோர் என்பவர் Zomato நிறுவனத்தில் பணிபுரிந்த போது கடந்த 2010.2022 ம் தேதி ஸ்டார்பேக்கரில் டீ சாட்பிட்டு கொண்டிருந்த போது போலிசார் ஒருவர் இருசக்கர வானத்திலும் எதிர் பார்ட்டி மற்றொரு இரு சக்கர வாகனத்திலும் வந்து வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர். பின்னர் எதிர் பார்ட்டி போலிசாரை அடித்து விட்டதாகவும், எதிர் திசையில் தவறுதலாக வந்து

போலிசார் வந்த வாகனத்தின் மீது மோத வந்ததால் இந்த தகராறு ஏற்பட்டுள்ளது. போலிசார் கீழே விழுந்து விட்டார், தூக்க சென்றேன், அவருக்கு போன் வந்ததால் கிளம்பி விட்டார், அவருக்கு முன்பாக எதிர் பார்ட்டி கண்ணன் சென்று விட்டார், புட் டெலிவரி ஆர்டர் வந்ததால் கிளம்பி விட்டேன் என்றும் கூறியுள்ளார்.

8) அ.சா.5 பாலாஜி என்பவர் கடந்த 11.10.2022 ம் தேதி 12.00–1.00 மணியளவில் அ.சா.5 ம், அவரது நண்பர் லோகநாதனும் உடுமலை வந்தபோது கலைசெல்வனும் கண்ணனும் சிவசக்தி காலனி ராஜகாளியம்மன் கோவில் அருகில் நின்று பேசி கொண்டிருந்தார்கள். முதல் நாள் இரவு பிரச்சனை ஆகி விட்டது என்று தற்சமயம் கண்ணனின் பிளசர் வாகனத்தை தங்கள் முன்பாக எடுப்பதாகவும் கூறிவிட்டு ஆவணத்தில் கையொப்பம் இடுமாறு கூறியதால் படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளார். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.5 உடையது தான். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9) அ.சா.6 ஆன சம்பத் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 11.10.2022 ஆம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்த போது காலை 07.00 மணிக்கு கலைச்செல்வன் த/பெ.பழனிச்சாமி என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்குப் பின் நிலைய குற்ற எண்.559/2022 ச/பி.294(b), 323, 506(2) இ.த.ச.–வின் கீழ் வழக்கு பதிவு செய்து அசலை நீதிமன்றத்திற்கும் மற்றும் புலன் விசாரணைக்காக உதவி காவல் ஆய்வாளர் திரு.சம்பத் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) அ.சா.7 ஆன சம்பத்குமார் என்பவர் உடுமலைப்பேட்டை காவல்

நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அ.சா..6 முதல் நிலை காவலர் 317 சம்பத் பதிவு செய்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 8.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விக்னேஷ், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11) பின்னர் சாட்சிகள் கலைசெல்வன், கிஷோர், ரஞ்சித் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் எதிரியை தேடி புலன் வைத்த போது 11.10.2022ம் தேதி 12.45 மணியளவில் உடுமலைப்பேட்டை வாசவி ராஜகாளியம்மள் கோவில் அருகில் TN 78 S 7101 HERO Pleasure வாகனத்தில் வந்த எதிரியை வாதி அடையாளம் காட்டியவரை 13.00 மணிக்கு பொது ஜன சாட்சிகள் பாலாஜி லோகநாதன் முன்னிலையில் எதிரி ஓட்டி வந்த வாகனத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

12) பின்னர் எதிரி கண்ணன் த/பெ. முருகேசன் என்பவரை 15.00 நிலையம் ஆஜர்படுத்தி திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்காக தக்க வழிக்காவல் வசம் ஒப்படைத்துள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91 வழியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும், இரு சக்கர வாகனத்தின் புகைப்படம் அசா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலை காவலர் சம்பத் என்பவரை விசாரித்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

13) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமானவற்றை எதிரியிடம் குற்றவியல் நடைமுறை

தொகுப்பு 1973, பிரிவு 313(1) (ஆ)–ன் கீழ் விளக்கி விசாரணை செய்தபோது எதிரி தனக்கு எதிரான அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துரைத்தார். மேலும் தான் நிரபராதி எனவும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினார். எனினும் எதிரி தரப்பில் சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

14) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

15) கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் தமது வாதுரையில், அ.சா.1 ஆனவர் குறுக்கு விசாரணையில் மது போதையில் இருந்தீர்கள் என்றால் ஆமாம் என்றும் கூறியுள்ளார் என்றும், வாதி மது போதையில் இருந்தார் என்றும் அதனால் தான் காலை சென்று புகார் கொடுத்துள்ளார் என்றும், அ.சா.2 ஆனவர் பேக்கரிக்கு டெலிவரி எடுப்பதற்காக வந்ததாக கூறியுள்ள நிலையில் அ.சா.3 ஆனவர் தானும், அ.சா2ம் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது என்றும் முரண்பட்டு கூறியுள்ளார் என்றும், புகாரில் உள்ள கையெழுத்திற்கும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள அ.சா.1 கலைச்செல்வன் கையெழுத்திற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது என்றும், அ.சா.1 சம்பவ தினத்தன்று மது போதையில தனக்கு எதிர்புறமாக வந்த எதிரி ஓட்டி வந்த வாகனத்தை வழிமறித்து டிராபிக் சம்பந்தமாக அவரிடம் தகாத வார்த்தையால் பேசி அவரை தாக்கி விட்டு பின்னிட்டு யோசனை செய்து மறு நாள் கொடுத்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல்

எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கு சாட்சிய சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்காததால் எதிரியை இவ்வழக்கில் இருந்து சட்டத்திற்குட்பட்டு விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**<u>பிரச்சனையும் தீர்வும்</u>**

16) இருதரப்பிலும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இவ்வழக்கின் எதிரிகள் மீதான இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்க வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாகும்.

17) இவ்வழக்கில் சம்பவ தேதி, சம்பவ நேரம் மற்றும் சம்பவ இடத்தைப் பொறுத்து அ.சா.ஆ.1. ஆன புகாரினைப் பரிசீலிக்கையில், கடந்த 10.10.2022 ம் தேதி இரவு 09.15 உடுமலை தளி ரோடு ஸ்டார் பேக்கரி அருகில் இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

18) மேலும், அ.சா.1 ஆனவர் அவரது முதன்மை சாட்சியத்தில் கடந்த 10.10.2022 ம் தேதி தனது மனைவியும், குழந்தையும் ராசி கல்யாண மண்டபத்திற்கு பொருள்கள் வாங்க சென்றவர்களை அழைப்பதற்காக வண்டி splender ல் 09.10 மணிக்கு சென்ற போது பேக்கரி அருகே இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலத்திற்கு ஒத்துப்போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 ன் குறுக்கு விசாரணையில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு காவல் நிலையத்திற்கு உள்ள தூரம் 200 மீ இருக்கும் என்றும், சம்பவம் நடைபெற்ற இடம் ஆள் நடமாட்டம் அதிகமுள்ள இடம் என்றால் சம்பவ நேரத்தில் சிட்டி பேக்கரியில் கடையில் அதிலுள்ள நபர்கள்

மட்டும் இருந்தனர் என்றும் கூறியுள்ளார்.

19) மேலும், கண்ணுற்ற சாட்சி அ.சா.2 ஆனவரின் சாட்சியத்தில் கடந்த 10.10.2021 ம் தேதி இரவு 9.15 மணிக்கு டெலிவரி எடுப்பதற்காக Star bakkery க்கு வந்தபோது என்றும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 ஆனவர் கடந்த 2010.2022 ம் தேதி ஸ்டார்பேக்கரில் டீ சாட்பபிட்டு கொண்டிருந்த போது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக அ.சா.1 ஆனவரின் சாட்சியத்திற்கு ஒத்துபோகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 ஆனவர் தனது முதல் விசாரணையில் (இவர் சம்பவ நேரம் மற்றும் இடத்தைப் பொறுத்தும் கூறவில்லை) கடந்த 2010.2022 ம் தேதி ஸ்டார்பேக்கரில் டீ சாட்பிட்டு கொண்டிருந்த போது என்று கூறியுள்ளார்.

20) அ.சா.6 ஆன சம்பத் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 11.10.2022 ஆம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்த போது காலை 07.00 மணிக்கு கலைச்செல்வன் த/பெ.பழனிச்சாமி என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.1 ஆன புகாரினை பெற்று பரிசீலனைக்குப் பின் அ.சா.ஆ.4 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசலை நீதிமன்றத்திற்கும் மற்றும் புலன் விசாரணைக்காக உதவி காவல் ஆய்வாளர் திரு.சம்பத் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

21) மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.7 ன் சாட்சியத்தில் அ.சா.6 பதிவு செய்து செய்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 8.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விக்னேஷ் மற்றும் முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.2 ஆன பார்வை மகசரும், அ.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடமும் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

22) இந்நிலையில், பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 முருகேசன் என்பவரது சாட்சியத்தில் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தானும், விக்கி என்பவரும் ஸ்டார் பேக்கரியில் டீ சாட்பிட்டு கொண்டிருந்தபோது தெரிந்து உதவி ஆய்வளார் அங்கு வந்ததாகவும், அவர் அடிதடி வழக்கு சம்பந்தமாக வந்திருந்தார் என்று கூறி வரைபடம் வரைந்ததற்கு, சாட்சி கையொப்பம் கேட்டதற்கு, தானும் விக்கியும் விவரம் தெரிந்து கையொப்பம் செய்ததாக கூறியுள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் கையெழுத்து உள்ளதில் விவரம் தெரியுமா என்றால் எழுத படிக்க தெரியாது என்றும், சாட்சி கையொப்பம் கேட்டதால் போட்டேன் என்றும் தனது முதல் விசாரணைக்கும் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கும் முரண்பட்டு கூறியுள்ளார். இருப்பினும் மேற்படி பார்வை மகசரினைப் பரிசீலிக்கையில் மேற்படி சாட்சிகளின் கையொப்பங்கள் இடம் பெற்றுள்ளது தெரியவருகிற நிலையில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் தான் மேற்படி ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

23) மேலும் எதிரி தரப்பில் புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அ.சா.6 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சம்பத் என்பவரின் குறுக்கு விசாரணையில் வாதி வந்து காவல் நிலையத்தில் அடுத்த நாள் காலை 7.00 மணிக்கு புகார் கொடுப்பதற்கு முன்பாக சம்பவம் பற்றி காவல் நிலையத்திற்கு தெரியாது என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 50 மீட்டர் என்றும், அ.சா.1 மது போதையில் இருந்ததால் தான் புகார் 10 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல என்றும் கூறியுள்ள நிலையில், அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் சம்பவம் இரவு 9 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ள நிலையில் காலை ஏன் புகார் கொடுத்தீர்கள் என்றால்

எனது குடும்பத்தினர் ராசி திருமண மண்டபத்திற்கு சென்றிருந்தனர், அவர்களை அழைக்க சென்றதால் மறு நாள் காலை புகார் கொடுத்தேன் என்று கூறியுள்ளார். எனவே மேற்படி புகாரானது காலதாமதம் குறித்து அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள விளக்கங்கள் ஏற்புடையதாக உள்ளது.

24) இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2017 (1)MWN (Cr) 29 SC Yogesh Singh Vs Mahabeer Singh and others என்ற வழக்கில்

> "CRIMINAL PROCEDURE CODE, 1973 (2 of 1974) Section 157– First Information Report – Delay in forwarding FIR to Court – Effect– In terms of Section 157, Police required to forward copy of FIR to Magistrate promptly without any delay – However, merely because of delay in sending FIR to Magistrate, Prosecution case would not become unreliable vitiating trial itself in all cases – In absence of any prejudice to Accused or any other infirmity, Prosecution case would not become unreliable – In instant case, no case of Accused that they have been prejudiced by alleged delay in dispatch of FIR to Magistrate – Delay, held, of no consequence"

என்று வழங்கிய சட்ட முன்தீர்ப்பின் விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. எனவே மேற்படி கால தாமதமானது எவ்வகையில் எதிரிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது என்பது குறித்து எதிரி தரப்பில் விளக்காததால் மேற்படி காலதாமதம் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக கருத இயலாது.

25) இந்நிலையில், அ.சா.1 முதல் அ.சா.6 வரையானவர்களை எதிரி தரப்பில் சம்பவ நேரம், தேதி மற்றும் இடத்தைப் பொறுத்து மறுத்து குறுக்கு விசாரணை செய்திருப்பினும் அது அவர்களது முதல் விசாரணையை குலைக்கும் வகையில் அமையவில்லை.

26) எனவே அ.சா.1 முதல் அ.சா.6 வரையானவர்கள் இவ்வழக்கின் சம்பவத்தைப் பொறுத்து ஒருவருக்கொருவர் ஒத்துப்போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவர்களது சாட்சியத்திற்கு ஒத்துப்போகும் வகையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் அமைந்துள்ளது. ஆகையினால்

இவ்வழக்கின் சம்பவ தேதி, நேரம் மற்றும் இடத்தைப் பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

27) இந்நிலையில் இவ்வழக்கு சம்பவ தினத்தன்று எதிரி வாதி கலைச்செல்வனைப் பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாக வனையப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலிக்கையில் மேற்படி சம்பவத்தில் எதிரி கண்ணன் என்பவர் ரோட்டில் தாருமாறாக பைக்கை ஓட்டி வந்து எனக்கு முன்னால் சென்ற கனரக வாகனத்தில் மோதுவது போல் வந்து மீண்டும் என் வண்டியின் மீது மோதுவது போல் ஓட்டிவந்ததாகவும், இதற்கு பார்த்து போக மாட்டியா என்று கேட்டதாகவும், பின்பு எதிரி வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு பைக்கில் அமர்ந்திருந்த என்னை நீ யாருடா கொம்மா புண்டை என்னை பார்த்து போனு சொல்லுறதுக்கு என்று கெட்ட வார்த்தையால் திட்டியதாக குறிப்பிட்டுள்ள நிலையில், அ.சா.1 ஆனவரின் முதன்மை விசாரணையில் பைக்கில் வந்தவர்கள் தனது வண்டியை மோதுவது போல் வந்ததால் பார்த்து போக வேண்டியது தானே என்று தான் கூறியதாகவும், எதிரி 50 மீ தாண்டி பேக்கரியில் வண்டியை நிறுத்திவிட்டு வந்து "நீ யாருடா கொம்மா புண்டை என்னை பார்த்து போனு சொல்லுவது கோத்தா" என்ற தகாத வார்த்தையால் திட்டியதாக சொல்லியுள்ளார்.

28) இந்நிலையில் இதைப்பொறுத்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்க்காணும் முன் தீர்ப்புகளை இந்நீதிமன்றம் கவனத்திற்கொள்கிறது.

> 2010 (2) LW (CRI)1434 Ramesh Vs State in that case justice Mohanram referred following decision and allowed the quashing all further proceedings (I) the decision reported in 1996 (1) CTC 470, KarpaghaVinayakam J in Paragraph 5, as laid on as follows ;

> " To prove the offence under section 294(b) IPC mere utterance of absence word are not sufficient but there must be a further proof to establish that it was to the annoyance of others, which is lacking in this case".

என்ற சட்ட விளக்கத்தை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. மேலும், அ.சா.1 ஆனவர் எதிரிகள் திட்டியதால் அங்கிருந்தவர்களுக்கும் தனக்கும் அருவறுப்பு, அவமானம் ஏற்பட்டது என்பதை குறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆனவர் இரண்டு தரப்பிலும் கெட்ட வார்த்தையால் பேசினார்கள் என்று கூறியுள்ளதும், அ.சா.4 ஆனவர் எதிரி தகாத வார்த்தையால் திட்டியது குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பதும் தெரியவருகிறது. ஆகையினால் எதிரி மீது வனையப்பட்ட இக்குற்றச்சாட்டை பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக கருத இயலாது.

29) மேலும் எதிரி கண்ணன் என்பவர் வாதி கலைச்செல்வனின் இடது கன்னத்திலும் தோள் பட்டையிலும் மாறி மாறி அடித்து வாதிக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக கூறி வனையப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்தும் பரிசீலிக்கையில் அ.சா.ஆ.1 ஆன புகாரில் எதிரி கையில் என் கண்ணத்திலும், தோல்பட்டையிலும் மாறி மாறி அடித்ததாகவும், இதில் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

30) இதனைப் பொருத்து பரிசீலிக்கையில் அ.சா.1 ஆனவர் தனது சாட்சியத்தில் மேற்படி சம்பவத்தின் போது தனது கன்னத்தில் ஆஜர் எதிரி அடித்து விட்டதாகவும், அவருடன் வந்தவர் எதுவும் செய்யவில்லை என்றும், பைக்கிலிருந்து கீழே தள்ளி விட்டார் என்றும், பேக்கரியில் இருந்த பெரியவர் வந்து கேட்டதற்கு அவரை தகாத வார்த்தையால் திட்டியதாகவும் கூறியுள்ள நிலையில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆன ரஞ்சித் என்பவர் தனது

சாட்சியத்தில் சம்பவத்தை தான் முழுமையாக பார்க்கவில்லை என்றும், 2 பேரும் மாறி மாறி அடித்து கொண்டதாகவும், கலைச்செல்வன் கீழே விழுந்து விட்டதாகவும் கூறியுள்ள நிலையில் இருவரும் ஒருவருக்கொருவர் தாக்கியுள்ளார்கள் என்பது தெரியவருகிறது.

31) மேலும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆனவர் தனது குறுக்கு விசாரணையில் 2 பேர் அடிப்பதற்கு முன்பு என்ன நடந்தது என்று தெரியாது என்றால் பார்க்கவில்லை, சத்தம் கேட்டு தான் வந்தேன் என்றும் கூறியுள்ளார். மேலும் அரசு தரப்பில் அ.சா.4 ஆனவரும் அ.சா.2 ஆனவரும் டீ சாப்பிட்டு கொண்டிருந்ததாக முன்மொழியப்பட்டிருந்த நிலையில் அ.சா.2 ஆனவர் தனது குறுக்கு விசாரணையில் டெலிவரிக்காக தான் பேக்கரிக்கு சென்றதாகவும் டீ சாப்பிட செல்லவில்லை எனவும் முரண்பட்டு கூறியுள்ளார். இந்நிலையில் அ.சா.2 ஆனவர் தனது முதல் விசாரணையில் சம்பவத்தை முழுமையாக பார்க்கவில்லை என்றும் இருவரும் மாறி மாறி அடித்துக் கொண்டனர் என்றும் தனது குறுக்கு விசாரணையில் சத்தம் கேட்டு வந்ததாகவும் ஒரே விசயத்தைப் பொறுத்து இரு வேறு முரண்பட்ட சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிற நிலையில், அவற்றில் எதிரிக்கு சாதகமாக உள்ள கூற்றை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்ள வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற

> "T.Subramanian Vs State of Tamilnadu reported in 2006(1) SCC 401 என்ற வழக்கில்
>
> If two views are reasonable possible on the very same evidence, it cannot be said that the prosecution has proved the case beyond reasonable doubt and if one point to guilty of the accused and another to this innocence, that view which is in favour of accused should be adopted"

என்று சுட்டிக்காட்டியுள்ள முன் தீர்ப்பின் சட்ட விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. எனவே இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்துப்போகும் வகையில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம்

கருதுகிறது.

32) மேலும் மற்றொரு கண்ணுற்ற சாட்சி அ.சா.4 ஆனவர் தனது சாட்சியத்தில் எதிர் பார்ட்டி போலிசாரை அடித்து விட்டதாகவும், எதிர் திசையில் தவறுதலாக வந்து போலிசார் வந்த வாகனத்தின் மீது மோத வந்ததால் இந்த தகராறு ஏற்பட்டதாகவும், போலிசார் கீழே விழுந்து விட்டதாகவும், அவருக்கு போன் வந்ததால் கிளம்பி விட்டதாகவும், அவருக்கு முன்பாக எதிர் பார்ட்டி கண்ணன் சென்று விட்டதாகவும் கூறியுள்ள நிலையில் இவரது சாட்சியத்தில் நம்பகத்தன்மையை பரிசிலீக்கையில் இவர் கேரள வாகனம் தளி – உடுமலை ரோட்டில் உடுமலை டவுனுக்கு வந்ததாக கூறியுள்ள நிலையில் போலிசார் விசாரணையில் உடுமலையில் இருந்து தளி சென்றதாக கூறியிருப்பதையும் ஒப்புக் கொண்டுள்ளார். ஒரே வாகனத்தைப் பொறுத்து இரு வேறு திசைகளில் வந்ததாக முதன்மை விசாரணையில் ஒரு திசையைக் குறிப்பிட்டும் தனது குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 161 வாக்குமூலத்தில் மற்றொரு திசையைக் குறிப்பிட்டும் கூறியுள்ளார் என்பது தெரியவருகிறது. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது. எனவே இவரது சாட்சியம் முழு நம்பகத்தன்மை கொண்டதாக கருத இயலாது.

33) மேலும் அ.சா.7 ன் குறுக்கு விசாரணையில் சாட்சி ரஞ்சித் என்பவர் டெலிவரிக்காக வந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் தவறு என்று கூறியுள்ள நிலையில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆனவர் தனது முதல் விசாரணையில் மேற்படி சம்பவ தினத்தன்று டெலிவரி எடுப்பதற்காக Star bakkery க்கு வந்தததாகவும், அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் நான் வெளியே தான் நின்று கொண்டிருந்தேன் என்றும், நானும் ரஞ்சித்தும்(அ.சா.2) டெலிவரி கொடுக்க அங்கு வரவில்லை, டீ சாபப்பிட தான் வந்தோம் என்று முரண்பட்டு கூறியுள்ளார்.

34) எனவே கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆனவர்களின் சாட்சியத்தை முழு நம்பகத்தன்மை கொண்டதாக கருத இயலாத சூழ்நிலையில் இதனைப் பொறுத்து மாண்புமிகு உச்ச நீதிமன்ற Vadivelu Thevar vs State of Madras; 1957 SCR 981: AIR 1957 SC 614, என்ற வழக்கில்

> " 11...........it is a sound and well-established rule of law that the court is concerned with the quality and not with the quantity of the evidence necessary for proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely: "
>
> (1) Wholly reliable, (2) Wholly unreliable (3) Neither wholly reliable nor wholly unreliable.
>
> " In the first category of proof the court should have no difficulty in coming to its conclusion either way it may convict or may acquit on the testimony of a single witness if it is found to be above reproach or suspicion of interestedness, incompetence, or subornation. In the second category the court equally has no difficulty to its conclusion. It is in the third category of cases that the court has to be circumspect and has to look for corroboration in the material particulars by reliable testimony direct or circumstantial........."

என்ற சட்ட முன் தீர்ப்பின் விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

35) இந்நிலையில் அ.சா.1 ஆனவர் எதிரி தன்னை கன்னத்தில் அடித்ததாகவும், பைக்கில் இருந்து கீழே தள்ளிவிட்டதைப் பொறுத்து சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் தன்னை தோள்பட்டையில் அடித்தாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் அ.சா.1 க்கு காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தவில்லை என்றால் வெளிப்புற காயங்கள் இல்லாததால் செய்யவில்லை என்றும், அ.சா.1 கொடுத்த புகாரிலும் வாக்குமூலத்திலும் கன்னத்திலும் தோள்பட்டையிலும் அடித்ததாக சொல்லியுள்ள நிலையில், எந்த

இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் என்று கூறியுள்ளார். மேலும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் மது போதையில் இருந்தீர்கள் என்றால் ஆமாம் என்று கூறிவிட்டு பின்னிட்டு இல்லை என்று இரண்டு பதில்களை கூறியுள்ள நிலையில் சம்பவத்தின் போது மது போதையில் இருந்தாரா இல்லையா என்பது குறித்து மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆகையினால் இவரது சாட்சியத்தில் முழு நம்பகத்தன்மை கொண்டதாக கருத இயலாது.

36) மேலும் அ.சா.1 ஆனவர் தனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரியும் மற்றொரு நபரும் ஸ்கூட்டியில் வந்ததாகவும் அவருடன் வந்தவர் எதுவும் செய்யவில்லை எனவும் கூறியுள்ள நிலையில் இது குறித்து புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ, இறுதி அறிக்கையிலோ குறிப்பிடப்படவில்லை. மேற்படி நபரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணைக்கு உட்படுத்தவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

37) மேலும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.7 ஆனவர் தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடைபெற்றது சம்பந்தமாக அடுத்த நாள் காலை 07.00 மணிக்கு புகார்தாரர் புகார் கொடுப்பதற்கு முன் நிலையத்திற்கு தகவல் தெரியாது என்றும், வாதியை அடுத்த நாள் தான் பார்த்தேன் என்றும், பட்டியல் சாட்சிகள் கிஷோர், ரஞ்சித் என்பவர்களை எங்கு வைத்து எப்போது விசாரித்தீர்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து 11.10.2022 ஆம் தேதி சுமார் காலை 09.00–12.00 மணி வரை என்றும் கூறியுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1ன் முதல் விசாரணையில் மேற்படி சம்பவ தினத்தன்று எதார்த்தமாக அந்த வழியாக காவல் உதவி ஆய்வாளர் வந்து பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் இது குறித்து புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

38) மேலும் புலன் விசாரணை அதிகாரி மறுநாள் புகார் கொடுப்பதற்கு முன்பு நிலையத்திற்கு தகவல் தெரியாது எனக் கூறியுள்ள நிலையில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ன் குறுக்கு விசாரணையில் போலிசார் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் Star Bakery ல் வைத்து இரவு 09.30 மணிக்கு சம்பவத்தினத்தன்று விசாரித்தார்கள் என்றும் போலிசார் விசாரணையிலும் இதையே தான் கூறியதாகவும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 ஆனவரும் அவரது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்தில் போலிசார் வந்தார்களா என்றால் வந்தார்கள் என்றும், எத்தனை மணி என்றால் 09.30 மணிக்கு பேக்கரிக்கு வந்தார்கள் என்றும் கூறியுள்ள சங்கதிகள் முரண்பட்டுள்ளது. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

39) மேலும் புலன் விசாரணை அதிகாரியின் முதல் விசாரணையில் வழக்கின் எதிரியை தேடி புலன் வைத்த போது 11.10.2022 ம் தேதி 12.45 மணியளவில் உடுமலைப்பேட்டை வாசவி ராஜகாளியம்மன் கோவில் அருகில் TN 78 S 7101 HERO Pleasure வாகனத்தில் வந்த எதிரியை வாதி அடையாளம் காட்டியவரை 13.00 மணிக்கு பொது ஜன சாட்சிகள் பாலாஜி லோகநாதன் முன்னிலையில் எதிரி ஓட்டி வந்த வாகனத்தை கைப்பற்றி அ.சா.ஆ.3 ஆன கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எதிரி கண்ணன் த/பெ.முருகேசன் என்பவரை 15.00 நிலையம் ஆஜர்படுத்தி திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்காக தக்க வழிக்காவல் வசம் ஒப்படைத்து, வழக்கு சொத்தை அ.சா.ஆ.6 ஆன படிவம் 91 வழியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக கூறியுள்ளார். இதனைப் பொறுத்து அ.சா5 ஆனவர் தனது முதல் விசாரணையில் கண்ணனின் பிளசர் வாகனத்தை எங்கள் முன்னால் எடுப்பதாக கூறி ஆவணத்தில் கையொப்பம் பெற்றதாக கூறியுள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.1

ஆனவரை தெரியும் என்றும், அ.சா.1 கேட்டதால் தான் கையொப்பம் செய்தீர்களா என்றால் ஆமாம் என்று கூறியுள்ளார். மேலும் தனது குறக்கு விசாரணையில் "அ.சூா.1 கலைச்செல்வன் தற்போது வந்தாரா என்றால் வந்தார் ஆனால் அவர் சென்றுவிட்டார். சாட்சி பின்னிட்டு இன்று இங்கு வரவில்லை என்று கூறினார்" என்றும் அ.சா.1 ஆனவர் வந்ததைப் பொறுத்து முரண்பட்டு கூறியுள்ளார். ஆகையினால் இவரது சாட்சியத்தில் முழு நம்பகத்தன்மை கொண்டதாக கருத இயலாது.

40) எனவே, மேற்கண்ட விவாதங்களிலிருந்தும் சாட்சிய சான்றாவணங்களிலிருந்தும், அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆனவர்களின் சாட்சிகளின் சாட்சியங்களில் முழு நம்பகத்தன்மை இல்லாத நிலையிலும், அ.சா.1 ஆனவரின் சாட்சியம், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.4 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 ஆனவர்களின் சாட்சியங்கள் ஒருவருவக்கொருவர் ஒத்து போகாத நிலையிலும், அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ள சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும், எதிரியின் மீதான இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக கருத இயலாது.

41) மேலும், எதிரி கண்ணன் என்பவர் வாதியைப் பார்த்து என்கிட்டே இனிமேல் வைச்சுகிட்ட என்னை பைக்கை ஏற்றி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக வனையப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து பரிசீலிக்கையில் அ.சா.ஆ.1 ஆன புகாரில் எதிரி கண்ணன் அவரது பைக்கில் கீலே கிடந்த என் மீது ஏற்றுவது போல் பைக்கை ஓட்டி வந்து குறுக்கு காட்டி என் கிட்டே இனிமேல் வைச்சிகிட்ட உன்னை பைக்கை ஏற்றி கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அ.சா.1

ஆனவர் கொலை மிரட்டல் விடுத்தது குறித்து குறிப்பிட்டு தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆனவர்களும் தங்களது சாட்சியத்தில் எதிரி கொலை மிரட்டல் விடுத்தாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

42) ஆகையினால், மேற்படி அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 வரையானவர்களின் சாட்சியங்கள் எதிரியின் மீதான இக்குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக அமையாத நிலையில், எதிரி மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக கருத இயலாது.

43) முடிவாக அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களான இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973, பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

44) இவ்வழக்கு சொத்தான HERO PLEASURE BLACK கலர் TN 78 S 7101 என்ற இருசக்கர வாகனம் கைப்பற்றப்பட்டு PR No.141/2022 ல் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அதன் உரிமையாளர் ஜோதிமணி க/பெ. தாமோதரன் என்பவர் Crl.M.P. No.8450/2022 என்ற எண்ணில் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே வைத்துக்கொள்ளவும், பிணைமுறி பத்திரங்கள் ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கானது மேல் முறையீடு செய்யும்பட்சத்தில் மாண்புமிகு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க செயல்படவும் உத்திரவிடப்படுகிறது.

## Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Cr.No | Name of the Police Station | Name | Father's Name | Occupation | Residency | Age |
| 1. | 559/2022 | Udumalpet | Kannan | Murugesan | Mechanic | S.S. Colony, Udumalpet. | 31/2022 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 10.10.2022 | 11.10.2022 | 11.10.2022 | 18.10.2022 | Not applicable | 13.08.2024 | 12.03.2026 | 30.03.2026 | Nil | No Delay |

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.30 20:53:10 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**இணைப்பு :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 13.08.2024 | கலைச்செல்வன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 07.10.2024 | ரஞ்சித் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | 07.10.2024 | முருகேசன் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.4 | 13.11.2024 | கிஷோர் ( கண்ணுற்ற சாட்சி) |

| | | |
|---|---|---|
| அ.சா.5 | 06.08.2025 | பாலாஜி (கைப்பற்றுதல் மகசர் சாட்சி) |
| அ.சா.6 | 18.11.2025 | சம்பத் (தலைமைக் காலவர்) |
| அ.சா.7 | 18.02.2026 | சம்பத்குமார் (புலன் விசாரணை அதிகாரி) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1. | அ.சா.1 | புகார் |
| அ.சா.ஆ 2. | அ.சா.3 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ 3. | அ.சா.5 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ 4. | அ.சா.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5. | அ.சா.7 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6. | அ.சா.7 | படிவம் 91 |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் :– இல்லை</u>**

**<u>எதிரி தரப்பு சான்றாவணம் :–</u> இல்லை**

**<u>அரசு தரப்பு சான்று பொருள் :–</u> இல்லை**

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரி விசாரணைக்காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை
3. தீர்ப்பு குறித்து காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.30 20:53:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர்
<u>அவர்களுக்கு</u>